செய்தி வெளியீடு எண்: 291 நாள் : 15.06.2016

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி **மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஒ.எஸ்.மணியன்** அவர்கள் தலைமையில் உலகளாவிய முதலீட்டாளர் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனங்களின் முன்னேற்றங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம், ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஜவுளிப்பூங்காக்களின் முன்னற்றம் தொடர்பாகவும், சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்கள் அமைப்பது தொடர்பான ஆய்வுக்கூட்டம் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் 15.06.2016 அன்று, காலை 11.00 மணி அளவில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாக இயக்குநர்கள், அவர்கள் சார்ந்த நிறுவனங்களின் முன்னேற்றம் குறித்து எடுத்துரைத்தனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படியான சிறப்பு திட்டமான இதனை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனங்கள் அனைத்தும் விரைந்து தேவையான நடவடிக்கைகளும் மேற்கொண்டு இத்திட்டத்தினை செவ்வனே செயல்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார். இதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்யும் எனவும் தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த ஜவுளிப்பூங்கா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஜவுளிப்பூங்காக்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் சிறிய அளவிலான ஜவுளி பூங்காக்கள் அமைப்பது தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இதற்கான பணிகளை விரைவில் செயல்படுத்த அறிவுறுத்தினார்.

மேலும் தமிழகத்தில் இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இயங்கும் அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.147.21 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் ஆதி திராவிடர் நலனினை கருத்தில் கொண்டு, செயலிழந்திருந்த இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ரூ.28.02 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆலைகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் நூலின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தரமான நூலினை வழங்குமாறு அறிவுறுத்தினார்.

நவீனமயமாக்கப்பட்ட இயந்திரங்களை செவ்வனே பராமரிப்பு மேற்கொண்டு இயந்திர உற்பத்தி திறனை சீர்படுத்தவும் அறிவுரை வழங்கினார்.

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் **திரு.ஹர்மந்தர்சிங்,** இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் **திருமதி க.லதா**, இ.ஆ.ப., துறையின் கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர்கள், உலகளாவிய முதலீட்டாளர் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாக இயக்குநர்கள் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகளின் நிர்வாக இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**